Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ஜகத் குருப்யோ நமஹ:

ஸ்ரீவித்யா ஸ்ரீமஹா ப்ரத்யங்கிரா தேவீ
த்யான கட்கமாலா ஸ்தோத்ரம் மற்றும்
அஷ்டோத்ர ஸத நாமாவளி

ஸ்ரீ வித்யா உச்சிஷ்ட
மஹா ஹணபதி நீலா ஸமேதர்

ஸ்ரீ வித்யா லலிதா
மஹா - பரா - ஷோட- ஸீ தேவி

ஸ்ரீவித்யா ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா தேவீ

ஸ்ரீவித்யா ஸ்ரீமஹா உச்சிஷ்ட
கணபதி உபாஸகர்
முனைவர் தவத்திரு. பெருமாள்
காளிதாஸனந்தா மஹான்

பூஜ்யஸ்ரீ ப்ரணவானந்த ப்ரஹ்மேந்த்ர
ஸரஸ்வதி அவதூத ஸ்வாமிகள்
அய்யர்மலை, குளித்தலை

ஆசிரியர் முனைவர் இராமமூர்த்தி. ந சென்னை

யோகினி மல்லிகேஸ்வரி மாதாஜி சித்தர்
நிறுவனர். ஸ்ரீவித்யா ஆஸ்ரமம் டிரஸ்ட்

வெளியீடு :
முனைவர் தவத்திரு பெருமாள் காளிதாஸனந்தா மஹான்
ஸ்ரீவித்யா ஆஸ்ரமம் ட்ரஸ்ட் பதிவு எண் : 626/1991
68, சங்கர் நகர், சேலம் - 636 007.
கைபேசி எண் : 88077 70555, 94435 15017

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ஞான முருகன்
ப்ரார்த்தனா ஸ்தல அர்ச்சகர்
சாக்த தந்த்ர நிபுணர் சிவஸ்ரீ ஸத்யோககாத
ஸ்ரீ G.சிவானந்தா சிவாச்சார்யர் குருநாதர்
தம்பதியருடன்

ஸ்ருங்கேரி ஜகத்குரு மஹாஸ் ஸ்தானம்
ஸ்ரீ சாரதா பீடாதிஸ்வரர் ஸ்ரீ சங்கரார்யர்
ஸ்ரீ மஹா ஸந்நிதானம் அவர்களால் தீட்சை வழங்கும் காட்சி
அருகில் காவி வேஷ்டியுடன் நிற்பவர் குருநாதர்
ஸ்ரீ P.V.ராமஸ்வாமி (திருச்சி)

ஸ்ரீ உச்சிஷ்ட கணபதி உபாஸகர்,
குருநாதர். ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணி ஸர்மா, சென்னை

ஸ்ரீ வித்யா மஹா ப்ரத்யங்கிரா ஸ்வாமி...
ஸ்ரீ பூர்ணானந்தாஜ ஸ்வாமிஜி, திருச்சி
குருநாதர் ஸ்ரீ P.V.ராமஸ்வாமி காளிதாஸா...

குருஜி இளம் வயதில்
தம்பதியுடன் இல்லத்தில் ஹோமம்

ஸ்ரீவித்யாஸ்ரம நவராத்திரி ஸ்ரீ சண்டி ஹோமம் காட்சி
(பழையது படம்) 1992

ஸ்ரீவித்யா ஆஸ்ரம்

ஸ்ரீ சண்டி ஹோமம்



ஸ்ரீ பாரதீ தீர்த்த
மஹா ஸ்வாமிகள், சிருங்கேரி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

க்ஷம்



ஸ்ரீவித்யா

ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா தேவீ

(தெய்வீக அன்னையின் பயங்கர வடிவம்)

*

முனைவர் இராமமூர்த்தி. ந
M.Sc., B.G.L., CAIIB, CCP, DSADP, CISA, PMP, CGBL, Ph.D.

*

ஸ்ரீவித்யா ஆஸ்ரமம் ட்ரஸ்ட்
பதிவு எண் : 626/1991
68, சங்கர் நகர், சேலம்-636 007.
கைபேசி எண் : **94435 15017, 88077 70555**

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தலைப்பு : ஸ்ரீ மஹாப்ரத்யங்கிரா தேவீ
(தெய்வீக அன்னையின் பயங்கர வடிவம்)

முதல் பதிப்பு : 2016

ஆசிரியர் : முனைவர் இராமமூர்த்தி ந.
http://ramamurthy.jaagruti.co.in/

பதிப்புரிமை © : ஆசிரியரிடம். இந்த புத்தகம் முழுவதுமோ, எந்த ஒரு பகுதியோ, ஆசிரியரின் எழுத்து பூர்வ அனுமதியின்றி, எந்த முறையிலும் வெளியிடக் கூடாது).

ISBN (13) : 978-93-82237-22-8

பக்கங்கள் : 72

விலை : ₹. 100

அச்சிட்டோர் : Sree Venkatachalapathi Press,
Prop. : R.Thangaraju
Ponnambalam Comlex,
Yercaud Main Road,
Salem 636 008
Email: r.thangarajusvp1985@gmail.com
Mobile: 94432 54396

வெளியிடுவோர் : ஸ்ரீ வித்யா ஆஸ்ரமம் ட்ரஸ்ட்
பதிவு எண் : 626/1991
68, சங்கர் நகர், சேலம்–636 007.

*****

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பொருளடக்கம்

சமர்ப்பணம் 4

ஆசியுரை 5

அறிமுகம் 7

ஸ்ரீ வித்யா ஆஸ்ரமம் 10

ஸ்ரீ வித்யா ஆஸ்ரமம் - ப்ரார்த்தனை ஸ்தலம் 15

ஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவீ 21

ப்ரத்யங்கிரா உருவம் 33

ப்ரத்யங்கிரா யந்திரம் 37

ப்ரத்யங்கிரா ஹோமம் 41

ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா தேவி கட்கமாலா ஸ்தோத்ரம் 44

ஸ்ரீ ப்ரத்யங்கிரா அஷ்டோத்ர ஶத நாமாவளி: 53

தாரா ப்ரத்யங்கிரா கவசம் 59

ஸ்ரீ நாராயணன் துதி 61

கோமாதா 62

விசேஷ பூஜை/ ஹோமம் 66

பூஜ்யஸ்ரீ ப்ரணவானந்த ப்ரஹ்மேந்த்ர ஸரஸ்வதி அவதூத ஸ்வாமிகள் 67

ஆசிரியரின் பிற நூல்கள் 71

*****

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri M. Hariharan Collection, Sholinganallur, Chennai

சமர்ப்பணம்

அய்யர்மலை, ஸ்ரீவித்யா மஹாசௌபாக்ய பராம்பிகா மடாதிபதி, பூஜ்யஸ்ரீ ப்ரண-வானந்த ப்ரஹ்மேந்த்ர ஸரஸ்வதி அவதூத ஸ்வாமிகள்தான் இந்தப் புத்தகத்தை எழுத தூண்டுகோலாக இருந்து, இதில் கோடிட்டு காட்டியிருக்கும் பல மந்திரங்களையும் கொடுத்து ஆசி வழங்கினார். அவரே ஸ்ரீவித்யா மற்றும் ஶாக்தத்தைப் பற்றிய அனைத்திற்கும் எனது குரு. அவரது பொற்பாத கமலங்களில் இப்புத்தகத்தை சமர்ப்பித்து ஆசி கோருகிறேன். இப்புத்தகத்தின் அனைத்து வாசகர்களுக்கும் அவரது ஆசிகள் உரித்தாகுக.

முனைவர் இராமமூர்த்தி ந.

*****

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



ஆசியுரை

நமது சநாதன தர்மத்தில், ஷண்மத வழிபாட்டை ஆரம்பித்து வைத்தவர் ஆதி ஶங்கர பகவத் பாதாளாகும். இவ்வாறான ஷண்மத வழிபாட்டில் ஶாக்த வழிபாடான ஸ்ரீதேவி வழிபாடானது மிகவும் முக்கியமானது.

ஸ்ரீதேவியை பலவித உருவங்களில் வழிபடுகின்றோம். இவற்றுள் ப்ரத்யங்கிரா வழிபாடு மிக முக்கியமான ஒன்றாகும். ஆயினும் ஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவியைப் பற்றியும், அந்த தேவி வழிபாடு பற்றியும் சரியான வழி காட்டுதல் இல்லாமல் பக்தர்கள் தவறாக வழி நடத்தப் படுகின்றனர்.

மேலும் ஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவி உருவத்தைப் பார்த்த உடனேயே பக்தர்களுக்கு ஒருவித பயம் ஏற்படுகின்றது. இவ்வாறான பயத்தைப் போக்கவும், சரியான உபாசனா வழிகாட்டுதலுக்காகவும் இப்புத்தகத்தை ஸ்ரீமான் முனைவர் ராமமூர்த்தி அவர்கள் எழுதியுள்ளார்கள். அவர்கள் முன்பே ஶக்தி வழிப்பாட்டைப் பற்றிய பல நூல்கள் எழுதியுள்ளார். அவரும் அவரது குடும்பத்திரும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற சதுர்வித புருஷார்த்தங்களை அடைந்து சுகானந்த சுகவாழ்வு வாழ ஸ்ரீஜகன்மாதா பராஷோடஶீ தேவியை பிரார்த்திக்கின்றோம்.

சேலம், ஸ்ரீ வித்யா ஆஶ்ரமத்தை நிர்வகித்து வரும் ஸ்ரீ வித்யா உபாசகர் காளிதாஸானந்த குருஜீ அவர்கள் இப்புத்தகத்தை வெளியிடுவதைப் பற்றி மிகவும் சந்தோஷம்.

இதைப் படித்து பயனுறும் பக்தர்களுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீதேவியின் பரிபூரண கடாட்சம் கிட்டட்டும்.

எப்பொழுதும் ஸ்ரீதேவியின் சேவையில்
ஜய ஜய ஜகதம்பா - ஸ்ரீகுருதேவதத்தா

அய்யர்மலை
2020

ஸ்ரீபிரணவானந்த சரஸ்வதி ஸ்வாமி
ஸ்ரீவித்யா பராம்பிகா ட்ரஸ்ட்

ஆனந்தம் சுபம் மங்களம்

*****

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection Sholinganallur, Chennai

ஸ்ரீ விநாயகர் துதி

திருவும் கல்வியும் சீரும் சிறப்பும்உன்
திருவடிப் புகழ்பாடும் திறமும்நல்
உருவும் சீலமும் ஊக்கமும் தளர்வுறா
உணர்வுந் தந்தெனது உள்ளத்தமர்ந்தவா !
குருவுந் தெய்வமுமாகி அன்பாளர்தம்
குறைதவிர்க்கும் குணப்பெருங்குன்றமே !
வெருவும் சிந்தை விலகக் கஜானனம் விளங்கும்
ஸ்ரீ வித்யா மஹா உச்சிஷ்ட கணபதியே !

சதுர் புஜம் ரக்ததனும் த்ரினேத்ரம் பாசாங்குசௌ மோதக பாத்ரதந்தௌ கரைர் ததானம் ஸரஸீருஹஸ்தம் உன்மத்த முச்சிஷ்ட கணேசமீடே

*****

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அறிமுகம்

குருர் பிரம்மா குருர் விஷ்ணு: குருர்தேவோ மஹேஶ்வர: |
குருஸாக்ஷாத் பரம்பிரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம: ||

தத்தாத்ரேய ஹரே க்ருஷ்ண உன்மத்தானந்த தாயக |
திகம்பர முனே பால பிஶாச ஞான ஸாகர ||

ஶாந்தம் தாந்தம் தபோ நிஷ்டம் ஶாந்தானந்த குருத்வஹம் |
பஜாமி யதீனாம் ஶ்ரேஷ்டம் அவதூதமஹர்னிஶம் ||

நமஸ்துப்யம் ப்ரணவானந்த அவதூத மஹாமுனே |
நித்ய மங்கள தாத்ரே ச ஶிஷ்ய ஸந்தோஷ தாயினே ||

நாம் ப்ரத்யங்கிரா தேவியைப் பற்றி கேள்விப் படும் பொழுதோ அல்லது பேசும் பொழுதோ, அவருடைய பயங்கரமான உருவம்தான் நம் மனக்கண் முன் தோன்றுகின்றது. மேலும் ப்ரத்யங்கிரா தேவி எப்பொழுதும் அதர்வண வேதத்துடனே சம்பந்தப் படுத்தப் பட்டே அணுகப் படுகிறாள். நம் எல்லோருக்கும் அதர்வண வேதத்தைப் பற்றிய ஒரு தவறான எண்ணமுள்ளது - இவ்வேதம் ஆவி, பேய் உலக, பில்லி, சூனியம், போன்றவற்றிற்கே அதிகம் பயன் படுத்தப் படுகின்றது. இவ்வாறான எண்ணத்திற்கு இக்கால சினிமாக்கள் அதிகம் தூபம் போடுகின்றன.

ஆனால் உண்மையில் அவ்வாறல்ல. ஶிவபெருமானின் ருத்ர ரூபமும், ஸ்ரீ தேவியின் சண்டீ ரூபமும் கூட மிகப் பயங்கரமானவை. ஆயினும், நாம் ருத்ர ஜபம், சப்தஶதீ பாராயணங்கள் மூலம் இத்தெய்வங்களை வழிபடவில்லையா?

அதே முறையில், ப்ரத்யங்கிரா தேவி வடிவம் கூட பயங்கரமாக காணப் பட்டாலும், அவளை சரியாகத் தொழுதால் அறுவடை செய்யும் நன்மைகள் மகத்-தானத்தானதாகத் இருக்கும். எதிர்மறை எண்ணங்கள் மற்றும் விளைவுகள் நீக்கி பயம், தீயு கண் திருஷ்டி, முதலியன நீக்கி மேலும் பல நன்மைகளையும், எதிர்-மறைகளையும் நீக்கிய பிறகு, முறை, நற்சிந்தனை-களும் நற்காரியங்களும் அங்கு நுழைய வழி ஏற்படும்.

ப்ரத்யங்கிரா தேவியைக் குறித்து ஹோமம் செய்யும் பலர் சிகப்பு மிளகாயை ஆகுதியாக பயன்படுத்தி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri. Harihara Collection, Sholinganallur, Chennai

ஹோமம் செய்வதை நாம் காண்கிறோம். ப்ரத்யங்கிரா தேவியை வழி படுவதில் வைதீக மற்றும் தாந்த்ரீக என்று இரு பாதைகள் உள்ளன. தாந்த்ரீக முறையில் வழிபடுபவர்கள் ஹோமத்தில் சிவப்பு மிளகாய் பயன்படுத்துவார்கள். பெரும்பாலும் அவர்கள் எதிர்மறை எண்ணங்களை உருவாக்கும் செயல்களில் ஈடுபடுபவர்களாக இருப்பார்கள். வைதீக பாதையில் ஹோமம் செய்யும் பக்தர்கள் கருப்பு மிளகையே பயன் படுத்துவர். அவ்வாறு கருப்பு மிளகை பயன் படுத்தி ஹோமம் செய்வது - உலக நன்மைக்காகவும், வேறுபல தர்மமான பிரார்த்தனைகளுக்காவும் நடத்தப் படுவதாகும். வைதீக முறையில் வழிபடுபவர்கள்தான் பக்தர்கள் என அழைக்கத் தகுதி பெற்றவர்களாவார்கள் - தாந்த்ரீக முறையில் வழிபடுபவர்கள் அல்ல.

முதன்மையாக, ப்ரத்யங்கிரா என்று பார்வதி எடுத்த அவதாரம் பற்றியும், அந்த வடிவம் மற்றும் நோக்கம் பற்றி விளக்கவும், மேலும் சில யோசனைகள் கொடுப்பதும்தான் இந்த புத்தகத்தின் இலக்கு. மேலும் சரியான முறையில் ப்ரத்யங்கிரா ஹோமம் செய்யவும் சில குறிப்புகள் கொடுக்கப் பட்டுள்ளன.

வாமகேஶ்வர தந்திரம் என்ற நூலில், ஶிவபெருமானுக்கும், பார்வதி தேவிக்கும் இடையே நடந்த ஒரு உரையாடலாக, தேவி கட்கமால ஸ்தோத்ரம் என்ற அழகான மந்திரம் நமக்கு கிடைத்துள்ளது. இந்த ஸ்தோத்ரத்தில் 1000 எழுத்துக்கள் உள்ளன. எனவே இது ஸஹஸ்ராக்ஷரீ மந்திரம் என்றே அழைக்கப்படுகின்றது.

அதேபோன்று ருத்ரயாமளம் என்ற நூலில், ப்ரத்யங்கிரா கட்கமால ஸ்தோத்ரம் என்ற ஒரு அழகான ஸ்தோத்ரம் உள்ளது. இந்த ஸ்தோத்ரத்தில் 2000 எழுத்துக்கள் உள்ளன. எனவே இது த்விஸஹராக்ஷரீ மந்திரம் என்று அழைக்கப் படுகின்றது.

இவற்றிற்கு சமமாக தாரா ப்ரத்யங்கிரா கவசம் என்று மற்றொரு முக்கியமான ஸ்தோத்ரம் உள்ளது. இதுவும் ருத்ரயாமள தந்திர நூலில், பார்வதி தேவிக்கு, ஶிவபெருமான் அறிவுறுத்துவதாக உள்ளது. மஹாவித்யா தாரா தேவியின் இந்த சக்தி வாய்ந்த

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கவசத்தை யார் பாராயணம் செய்கின்றார்களோ, அவர்களுக்கு, எல்லா இடங்களிலும் வெற்றி கிடைக்கும். மற்றும் அவர்கள் இவ்வுலகில் தேவையான அனைத்தையும் பெறுவார்கள். அவர் அச்சமற்றவராக ஆகி, அனைவராலும் எல்லா இடங்களிலும் மரியாதைக்குரியவராக ஆகிறார். இந்த கவசம், உள்ளே மற்றும் வெளியில் இருக்கும் எதிர்மறை ஆற்றல்களை நீ க்கிவிடுகின்றது.

இந்த ப்ரத்யங்கிரா கட்கமாலா ஸ்தோத்ரம், ப்ரத்யங்கிரா கவச ஸ்தோத்ரம் இவற்றுடன ப்ரத்யங்கிரா அஷ்டோத்ர அர்ச்சனை முதலியவைகள் இப்புத்தகத்தில் கொடுக்கப் பட்டுள்ளன.

இந்த புத்தகத்தை எழுத எனைத் தூண்டி, இதற்குறிய மந்திரங்களைக் கொடுத்து, இப்புத்தகத்திற்கு ஆசியுரையும் வழங்கி, எங்களை கௌரவித்து ஆசிர்வதித்த - ஶாக்த சக்ரவர்த்தி பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ப்ரணவானந்த ப்ரஹ்மேந்த்ர ஸரஸ்வதி அவதூத ஸ்வாமிகளின் பொற்பாதங்கள் தண்டனிட்டு வணங்குகிறோம். மேலும் அவருக்கு எங்கள் நமஸ்காரங்களுடன் கூடிய க்ருதஜ்ஞைகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இப்புத்தகம் வெளிவர உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக. வாசகர்களுக்கு இந்த புத்தகத்தின் உள்ளடக்கங்கள் பெரும் பயனுடையதாக இருந்திருக்கும் என்று நம்புகிறோம். வாசகர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

எமது அனைத்து குருமார்களுக்கு எங்கள் நமஸ்காரங்கள்.

ஓம் தத் ஸத்

சென்னை
நவம்பர் 2016 *முனைவர் இராமமூர்த்தி ந.*

*****

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ வித்யா ஆஶ்ரமம்

ஸ்ரீவித்யா உபாசகர் தவத்திரு பெருமாள் ஸ்ரீ காளிதாஸானந்தா ஸ்வாமி மஹான் சிறுகுறிப்பு.

நம் பாரத தென் இந்தியா சேர கொங்கு மண்டலத்தில் சிவனடியார் குலமான தேவாரம், திருவாசகம், வேதம் ஓதும் கொங்கு தமிழ் அர்ச்சகர் விவசாய குடும்பமான, நாமக்கல் மாவட்டம் அருகில் உள்ள நைனாமலை வரதராஜ் பெருமாள் ஸன்னதி மலை அடிவாரம் உள்ள மின்னாம்பள்ளி எனும் சிற்றூரில் 1951 ஆம் ஆண்டு மாசி மாதம் ப்ரஹ்ம ஸ்ரீராமசாமி–மீனாட்சி திவ்ய தம்பதியருக்கு மூத்த குமாரராக இவ்வுலகில் அவதரித்தார்.

இளம் வயதிலேயே ஆன்மீக பக்தியுடன் காணப்பட்டார். அவரது ஏழாவது வயதில் தந்தையை இழந்து, தாயின் அரவணைப்பில் இருந்த நிலையில் அவரது தாய்க்கு ஏழுமலையான் அருட்பெருஞ்ஜோதி அருள்வாக்கு கிடைத்த நிலையில் தாய் ஆன்மீக பணியில் கடும் தவம், தியானம் இருந்து அந்த பகுதி மக்களுக்கு அருள்வாக்கு சொல்லி குறைகளை நிவர்த்தி செய்து ஆன்மீக பணியில் ஈடுபட்டு வந்தார்.

தாயுடன் ஆன்மீக இறைபணி செய்த நிலையில் அவரது எட்டாவது வயதில் ஸ்ரீமுருகப் பெருமான் அருட் கடாச்சம் அவருக்கும் கிடைத்து அவரை நாடி வரும் பக்தர்களுக்கு அருள்வாக்கு சொல்லி வந்த நிலையில் தாயிடம் இருந்து பிரிந்து, சேலம் சிவஸ்ரீ ஸ்ரீசிவானந்த சிவாச்சார்யார் அவர்களிடத்தில் சிஷ்யராக அடிபணிந்தார். அயராது இறைபணியில் ஈடுபாட்டுடன் இருந்தை பார்த்து எனக்கு இறைபணியை முறையாக கற்றுத் தந்து சிவதீட்சையும் உபாஸனையும் செய்தார்.

அவருடைய ஆன்மீக பணியை பார்த்து ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஸ்ருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதிகள் மூவரின்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பரிபூர்ண திருவருள் அடைந்த திருச்சி ஸ்ரீ P.V.ராமஸ்வாமி, ஸ்ரீவித்யா உபாஸகருமான மஹான் அவர்கள், ஸ்ரீவித்யா லலிதா மஹா பரா–ஷோட–ஸீ மந்தர உபாஸனையும், ஸ்ரீவித்யா மஹா பிரத்தியங்கிரா தேவீ மந்தர உபாஸனையும் அளித்து, மேலும் தக்ஷினாம்னாய ஸ்ருங்கேரி ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யார் மஹான்களால் எனக்கு ஸ்ரீவித்யா காளிதாஸனந்தா ஸ்ரீபெருமாள் காளிதாஸ் ஸ்வாமிஜீ என்று அவர் தன் திருநாவினால் ஆசீர்வதிக்கப்பட்டார்.

அம்பாளின் அனுகிரஹத்தால் காலஞ்சென்ற சென்னை ஸ்ரீ உத்ருட (உச்சிஷ்ட) கணபதி உபாஸகர் ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணிய ஸர்மா அவர்கள் ஸ்ரீ வித்யா ஸ்ரீமஹ உத்ருட (உச்சிஷ்ட) கணபதி மந்தர உபாஸனையும் கொடுத்து அவரது ஆன்மீக பணிக்கு மிக உறுதுணை–யாய் இருந்தார்.

ஆன்மீக பணி செய்து வந்த வேளையில் தாயின் கட்–டளைபடி அவரது இருபத்தி ஏழாவது வயதில் அவரது தாய்மாமன் மகள் திரு–வருட்செல்வி மல்லிகாவை திருமணம் செய்து மனைவியும் சிவதீட்சை பெற்று அவரது இறைபணிக்கு மேலும் உறு–துணையாக இருந்து வந்தார். மண வாழ்க்கையில் அவர்களுக்கு மூன்று குழந்தைகள்.

குழந்தைகளும் தந்தை, தாயுடன் சேர்ந்து ஆன்மீக பணியை மென்மேலும் ஈடுபட்டு தான் வசிக்கும் குடியிருப்பிலேயே சண்டியாகம், ஹோமம், பாராயணம் பூஜைகள் அனைத்தும் திருவுரு படமாக வழிபட்டு பக்தர்களுக்கு அருள்வாக்கு சொல்லப்பட்டு வந்தது.

பக்தர்கள் வழங்கும் உதவிகளை ஏற்று பராசக்தியை பக்தர்கள் வணங்கவும் வழிபாடு செய்யவும் வழிபாட்டு ஸ்தலம் கட்ட முடிவு செய்து அதற்கான நிலம் தேடி பக்தர்கள் வசதிக்கேற்ப சேலம் டவுன்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

சங்கர் நகரில் வாங்கப்பட்டு, சேலம் ஸ்கந்தாஸ்ரம ஸத்குரு சாந்தானந்தா ஸ்வாமிகள் அருள்கூற்றுப்படி, ஸ்ருங்கேரி ஸமஸ்தானம் ஜகத்குரு ஸ்ரீபாரதீ தீர்த்தர் மஹா ஸ்வாமிகளின் பொற்கரங்களால் 1992–ஆம் ஆண்டு ஸ்ரீவித்யா ஆஸ்ரமம் என்னும் வழிபாட்டு ஸ்தலத்திற்காக அடிக்கல் நாட்டப்பட்டது.

மஹான்களால் த்யான உருவ படமாக வழிபட்டு வந்த அன்னையை திருஉருவ கற்சிலா விக்ரஹங்களாக வடிவமைத்து வழிபட வேண்டும் என்று பக்தர்கள் வேண்டுகோளுக்கு இணங்க, அதற்கான மண்டபம், கோபுரங்கள் பணியை துவக்கி இரவு பகல் பாராமல் பக்தர்கள் பேராதரவுடன் கட்டி முடிக்கப்பட்டு

1. ஸ்ரீநீலா சரஸ்வதி ஸமேத ஸ்ரீவித்யா மஹா–உத்ருட (உச்சிஷ்ட) கணபதி
2. ஸ்ரீ வித்யா லலிதா மஹா பரா–ஹோடஸு–தேவீ,
3. ஸ்ரீவித்யா மஹா ப்ரத்தியங்கரா–தேவீ,

ஒவ்வொன்றும் ஆறு அடி உயரத்தில் திருஉருவம் கற்சிலா விக்ரஹங்களாக ஸ்ரீலஸ்ரீ P.V.ராமஸ்வாமி குருஜீ மஹான் அவர்களால் 1995–ஆம் ஆண்டு 3 நிலை கோபுரம் திருப்பணி முடிந்து திருப்பணி கும்பாபிஷேகம் செய்து பிரதிஷ்டை செய்யப்பட்டது.

மேலும் இந்நூலில் காணும் அற்புத தெய்வங்கள் அனைத்தும் ஒவ்வொன்றாக அவ்வப்போது கற்சிலா விக்ரஹங்களாக மஹான்களால் பிரதிஷ்டை செய்து பக்தர்களுக்கு வேண்டும் வரம் கொடுத்து அருள்பாலித்து வரும் ஸ்தலம் ஆகும்.

ஸ்ரீவித்யா ஆஸ்ரம வழிபாட்டு ஸ்தலத்தை ஸ்தாபகரும், நிர்வாகியுமாக காளிதாஸனந்தா – மல்லிகா ஸ்தல பராமரிப்பு, யாகம், ஹோமம், பாராயணம், பூஜைகள் அனைத்தும் நடைபெற்று வந்தது சிறப்பிக்கதக்கது.

ஆன்மீக பணியில் கடும் பாராயணம், தியானம் செய்திருந்த வேளையில் ஸ்ரீவித்யா ஸ்தாபகரும், நிர்வாகியுமான திருமதி. ஸ்ரீவித்யா உபாஸகர் மல்லிகா காளிதாஸனந்தா அவர்கள் 2018–ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் இவ்வுல்கை விட்டு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பிரிந்து அன்னை பராசக்தியின் காலடியில் தெய்வமாக சேர்ந்தார்.

ஸ்ரீ வித்யா ஆஸ்ரம ப்ரார்த்தனை ஸ்தலத்திற்கு இவருடைய ஆன்மீக பணியில் நீண்ட கால தொடர்பு உடையவர்கள்

- சேலம், ஸ்ரீலஸ்ரீ சுகவனம் சிவாச்சார்யார் அவர்கள் மற்றும்
- ஸ்ரீ வித்யா குல பூஷனம் ப்ரம்மஸ்ரீ ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி P.V. கணபதி சுப்ரமண்யம் சாஸ்திரிகள் அவர்கள் மற்றும்
- Aluva, Kerala, Thanthra Vidhya Peedam, Tantra Rathnam, **Azhakathu Shastrasarman Namboodiripad** அவர்கள் மற்றும்
- பாலகாடு வடக்கந்தறை, M.E., நந்தன நம்பூதிரி அவர்கள் மேலும்
- ஸ்ரீ வித்யா உபாஸகர்கள், மகான்கள் வருகை தந்து சண்டீ பாராயணம், யாகம், அனைத்து தெய்வ வேதபாராயணம் செய்து அன்னை பராசக்தியின் அருளாசியை பக்தர்களுக்கு வழங்கி ஆசீர்வதித்தார்கள்.

ஆன்மீக பணிச்சேவைக்காக, 16.09.2018 அன்று சர்வதேச தமிழ்ப்பல்கலைக்கழகம் Doctor of Letters (Honor's Causa) மதிப்புறு முனைவர் பட்டமளித்து பாராட்டு சான்றிதழ் தவத்திரு பெருமாள் ஸ்ரீ காளிதாஸனந்தா மஹான் என்று பெயர்சூட்டி கௌரவிக்கப்பட்டது.


The Universal Tamil University
Doctor of Letters

இவரது 70 வயதிலும் தியானம், பாராயணம், யாகம், ஹோமம் செய்வது, அருள்வாக்கு சொல்லி பக்தர்களுக்கு ஆசீர்வதித்து வருகிறேன் என்றால் அது தேவியின் அற்புதமே மஹா சக்தியே ஆகும்.

இறைவன் ஆன்மீக பணியில் இவரது தாயார் அடுத்து இவர்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Harihara Collection, Sholinganallur, Chennai

இவருக்கு அடுத்து மூன்றாவது தலைமுறையாக இவரது மகன் சாய் வரதராஜன் ஸர்மா ஆவார்.

சாய் வரதராஜ் ஸர்மா அவர்கள் சிவதீட்சை பெற்று வேத பாராயணம் நன்கு கற்று இறை பணி செய்து வந்த நிலையில் மானாமதுரை ஸ்ரீ வித்யா குல பூஷணம் ப்ரம்மஸ்ரீ P.V.கணபதி சுப்ரமண்யம் சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீ வித்யா உபாஸனை ஸ்ரீ வித்யா மஹா ப்ரத்யங்கிரா தேவீ உபாஸனையாக பெற்றும் சாய் வரதராஜ் ஸர்மா தீபா தம்பதியாக சென்னை குகநந்த மண்டலி ஸ்ரீலஸ்ரீ சுதாகர் அவர்களால் சிவதீட்சையும் பெற்று கொண்டார்கள்.

தற்போது ஸ்ரீ வித்யா ஆஸ்ரம ப்ரார்த்தனை ஸ்தலத்தை ஆன்மீக பூஜைகள் மற்றும் நிர்வாகத்தையும் கவனித்து வருகிறார்கள்.

ஸ்ரீவித்யா ஆஸ்ரம வழிபாட்டு ஸ்தல அன்னை பராசக்திகளின் அற்புத தேவதைகள் தெய்வங்களுக்கு காலை–மதியம்–இரவு என்று மூன்று வேளை நெய்வேத்தியத்துடன் பூஜை, ஆராதனை, பாராயணம் நடைபெறுகிறது. மற்றும் அன்னை பராசக்தியின் நவராத்திரி பூஜைகள் அனைத்தும் 9 நாட்கள் பாராயணம், யாகம் தினமும் நடைபெறும்.

வழிபாட்டு ஸ்தலத்திற்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கி ஆசீர்வதிக்கப்படுகிறது. ஸ்ரீ அன்னையின் பேரருளால் ஸ்ரீவித்யா ஆஸ்ரம் தென்தமிழ்நாட்டில் முக்கிய வழிபாட்டு ஸ்தலமாக விளங்கும் என்பது ஸ்ரீ அன்னையின் அற்புதமாகும்.

சேலம் ஸ்ரீ வித்யா ஆஸ்ரம் ட்ரஸ்ட்

சுபம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ வித்யா ஆஸ்ரமம் - ப்ரார்த்தனை ஸ்தலம்

ஆன்மீகம் என்பது விரக்தி கொண்ட மனதில் நம்பிக்கையை ஊட்டி நன்மைகளைப் பெருக்குவதிலும், துயரங்களைக் களைவதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

நம்மை சுற்றி சிறிதும், பெரிதுமாக பல வடிவங்களில் அருள்புரியும்' தெய்வங்களின் ஆலயங்கள் இருந்தாலும், குறிப்பிட்ட சில ஆலயங்களும், அதிலுள்ள அழகிய தெய்வங்களின் சிலை வடிவங்களும் நம்மை பெரிதும் வசீகரிக்கும். அப்படி ஒரு ஆலயம்தான் **சேலம், சங்கர் நகரில்** உள்ள "ஸ்ரீவித்யா ஆஸ்ரம்" அங்குள்ள தெய்வங்களின் கருணை ததும்பும் அழகை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை.

காண்பதற்கு மிக பிரமாண்டமாக இல்லை என்றாலும், வருபவர்களுக்கு நிம்மதியையும், பிரமாதமான வாழ்க்கையையும் வழங்குவதில் நிகரற்றதாக இருக்கிறது இங்கு ஆலயம். இதிலுள்ள தெய்வங்கள் வேறெங்கும் காணமுடியாத சிறப்பைப் பெறுகின்றன.

ஸ்ரீ வித்யா மஹா உச்சிஷ்டகணபதி நீலா சரஸ்வதி சமேதர்

வரிசையாக இருக்கும் வீடுகளின் இடையில் நானும் உங்களுடன் இருக்கிறேன் எனும் நம்பிக்கையை தரும் வண்ணம் அமைந்துள்ளது. நீள்சதுர வடிவில் நேர்த்தியான வடிவமைப்பில் கட்டப்பட்டுள்ள இந்த வழிபாட்டு ஆலயம். உள்ளே நுழைந்ததும் 'இந்த உலகமே தனக்குள் அடக்கம்' என்பதுபோல்,

ஸ்ரீ வித்யா மஹா உச்சிஷ்டகணபதி நீலா சரஸ்வதி சமேதர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

6 அடி உயரத்தில் கற்சிலா விக்ரகங்களாக வெண்பட்டு வேஷ்டி உடுத்தி கம்பீரமாக அமர்ந்திருக்கிறார் ‘ஸ்ரீவித்யா மஹா உச்சிஷ்ட கணபதி’ கிழக்கு பார்த்தபடி தன் மனைவி நீலா சரஸ்வதி தேவியை தன் இடுப்பில் அமர்த்தி தம்பதி சமேதராக காட்சியளிக்கும் இவரை வணங்கினால் திருமணத் தடைகள் விலகும். நம் தலையெழுத்தை மாற்றும் சக்தி கொண்டவராகவும், நல்ல எண்ணம் கொண்டவர்களுக்கு நன்மைகள் அருள்வதிலும் இவருக்கு நிகர் இவரே.

இந்த கணபதியை சுற்றி வரும்போது,

1. சனி பகவான்
2. பாலசுப்பிரமணியர்
3. ஆஞ்சநேயர்
4. தன்வந்திரி பகவான்
5. ஹயக்ரீவர்
6. ஸ்ரீ தட்சிணாமூர்த்தி
7. ஸ்ரீ தத்தாத்ரேயர்

ஆகியோர் நம் கவலைகளைத் தீர்க்க அமைதியுடன் அமர்ந்தும், நின்றும் கற்சிலா விக்ரகங்களாக காட்சி தந்து அருள் புரிகின்றனர். மேலும் பளிங்குச் சிலையாக உருவான சீரடி சாய்பாபாவையும் பக்தர்கள் வணங்குகிறார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ வித்யா மஹா பிரத்யங்கரா தேவி

ஸ்ரீ வித்யா மஹா பிரத்யங்கரா தேவீ

கோபுரம் சுற்றி வந்ததும் வடக்கு நோக்கி 6 அடி உயரத்தில் கற்சிலா விக்ரஹங்களாக நின்ற கோலத்தில் ஸ்ரீ வித்யா மகா பிரத்யங்கரா தேவீ', தீ ஜ்வாலையுடன் சிம்ம முகத்துடன் பெண் ரூபத்தில், கைகளில் பாசம், அங்குசம், கபாலம் ஏந்தி, சிங்க வாகனத்தில் நாக கன்னிகள் குடைபிடிக்க அதர்வண பத்ரகாளியாய் காட்சி தருகிறார் இந்த அன்னை. பித்ரு சாபம், குரு சாபம், கோ சாபம் போன்ற பதினாறு வகையான சாபங்களை நிவர்த்தி செய்வதோடு, நாம் அறியாமல் செய்யும் பாவங்களையும் போக்கி சக்தி கொண்டவள்.

ஸ்ரீ வீர சரபேஸ்வரர்

பிரத்யங்கரா தேவிக்கு எதிரில் மேற்கு நோக்கி வீர சரபேஸ்வரர் காட்சி தருகிறார். நரசிம்ம மூர்த்தி இரண்யகசிபுவை வதம் செய்தபிறகும் நரசிம்மரின் கோபம் தணியவில்லை. அவரை சாந்தப்படுத்த சிவபெருமான் எடுத்த அவதாரமே 'வீர சரபேஸ்வரர்', பறவையான சரப வடிவத்தில் எட்டுக்கால்கள், சிங்கமுகம், நரிவால் கொண்டு அவதரித்தார். இவர் தனது இரு மனைவியரான பிரத்யங்கராவையும், சூலினி துர்க்கையையும் இரு தோள்களிலும் ஏந்தி கைகளில் நாகம், பாசம், அங்குசம், நெருப்புடன் சினத்தை கட்டுப்படுத்த உதவுகிறார் இவர். இவரை வணங்கினால் நரம்பு சம்பந்தப்பட்ட நோய்களும், எதிரிகளின்மீதான பயமும் விலகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Vinjamoor Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ வித்யா லலிதா மஹா பரா சோடஷி தேவி



ஸ்ரீ வித்யா லலிதா மஹா பராஷோட ஸீ தேவி

6 அடி உயரத்தில் ஸ்ரீ மஹா சௌபாக்ய லலிதா பரா–ஷோடஸீ அன்னை பரமேஸ்வரியின் அருளால் கிழக்கு நோக்கி காட்சி அளிக்கும் கரும்பு வில், புஷ்ப பாணங்கள், பாஸ அங்குஸம் ஏந்திய நான்கு கரங்களும், இரு கரங்களில் வீணையும், ஓலை சுவடியும், ஜபமாலை ஏந்திய நான்கு திருக்கரங்களும், அன்னையின் அபயம், வரதம் இரண்டு கைகளில் கமலங்களுடன் ஆக 12 திருக்கரங்களுடன் ப்ரும்ா, விஷ்ணு, ருத்ரன், ஈஸானன் கட்டிலின் 4 கால்களாகவும் ஈஸ்வரனின் மேற்தளமாகக் கொண்டு, அவரது நாபியிலிருந்து தாமரை மலரின் மீது அமர்ந்திருக்கும் திருவுருவமாக ஸ்ரீ லலிதா மஹா பராஷோடஸீயாக அருள் பாலிக்கிறார். அன்னையின் எதிர் நோக்கி சிங்க வாகனம் கம்பீரமாகம், பலிபீடமும் பக்தர்களுக்கு காட்சி அளிக்கிறது.

அன்னையின் வலதுபுறமும், இடதுபுறமும் மாதங்கியும், வராகியும் இருக்கிறார்கள். தமிழகத்தில் எங்கும் காணக் கிடைக்காத அற்புதமான தோற்றம் கொண்டவர் இந்த அன்னை. பாலாம்பிகை, திரிபுரசுந்தரி. லலிதாம்பிகை, ராஜராஜேஸ்வரி, ஸ்ரீ வித்யா லலிதா மகா பராசோடஷி என ஐந்து நிலைகள் ஒன்று சேர்ந்து அருள்பாலித்து வருகிறாள்.

அடுத்து மேற்குப் பார்த்த கற்சிலா விக்ரகங்களாக ஸ்ரீ வித்யா ஸ்வர்ண விஜய் பைரவர், தன் வாகனமான நாயுடன் நின்ற கோலத்தில் இருக்கிறார். காசியில் உள்ள விஜய பைரவரே, இங்கும் புலித்தோல் வஸ்திரம் சாற்றி சிவாம்சமாக

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அருள்புரிகிறார். இவரின் எதிரே உள்ள யாக குண்டத்தில் மாதத்தின் சிறப்பு தினங்களான அமாவாசை, அஷ்டமி, பவுர்ணமி தினங்களில் பக்தர்களின் பிரார்த்தனைகளுக்கேற்ப யாகங்கள் நடைபெறுகிறது.

இத்தலத்தில் உஷ்சிஷ்ட கணபதிக்கு மாதந்தோறும் சங்கடஹர சதுர்த்தியும், ஆவணி விநாயகர் சதுர்த்தியும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. மேற்படி ஸ்ரீவித்யா ப்ரார்த்தனை ஸ்தலத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஆடியில் ஆசார நவராத்திரி, தையில் மாதங்கி நவராத்திரி, புரட்டாசியில் சாரதா நவராத்திரி, பங்குனியில் வசந்த நவராத்திரிகள் நடைபெறுகின்றன.



ஸ்ரீ வித்யா மாதங்கி தேவீ



ஸ்ரீ வித்யா மஹா வாராஹி

ஸ்ரீ வித்யா ஸ்வர்ண விஜய் பைரவர்



சிங்க வாகனம் மற்றும் பலி பீடம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ வித்யா லலிதா மஹா – பரா – ஷோட– ஸீ தேவி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவீ

ஸ்ரீ ப்ரத்யங்கிரா (प्रत्यङ्गिरा) அல்லது சில நேரங்களில் நரசிம்ஹீ[1] அல்லது நாரஸிம்ஹிகா என்றும் அழைக்கப் படும் தேவி, ஶக்தி உபாசனையுடன் சம்பந்தப் பட்ட, நித்திய ஆற்றல் கொண்ட தெய்வமாகும். அவள் ஒரு பெண்சிங்க முகமும், மனித உடலும் கொண்ட தெய்வம். சிங்கம் மற்றும் மனித வடிவங்களின் இந்த கலவை, நல்ல மற்றும் தீ யவைகளின்சமநிலையை குறிக்கின்றது.

ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா தேவி ஶரபேஶ்வரரின் திமிரை அழிக்க வந்த ஒரு சக்தி வாய்ந்த தெய்வம் என்று கருதப் படுகின்றாள். ஶரபேஶ்வரர், ஶிவபெருமானின் உக்ர அவதாரமாகும். "தைரியம் மற்றும் மூர்க்கத்துடன் கூடிய பாதி மனித பாதி சிங்கம் அவள்," - நாரஸிம்ஹிகா என்று காளி சகஸ்ரநாம ஸ்தோத்ரத்தில் குறிப்பிடப் படுகின்றாள். அந்த நாரஸிம்ஹிகா, தனது பிடரி மயிரைச் சிலிர்க்கும் பொழுது நட்சத்திரங்கள் கலைந்து விடுகின்றன என்று கூறப்பட்டுள்ளது. அவள் 'க்ஷம்' என்ற பீ ஜாக்ஷர பேரின்பத்திற்குள் அடங்கியுள்ளாள். ரிக் வேதத்தில், கிலக் காண்டத்தில் ப்ரத்யங்கிரா சூக்தம் விவரிக்கப் பட்டு உள்ளது.

அதர்வண வேதத்திற்கு 'அதர்வாங்கிரஸ' என்று மற்றொரு பெயர் உண்டு. ஆங்கிரஸ வேதம் என்பது பில்லி சூனியத்தைக் குறிக்கும். ஆங்கிரஸ கல்பம் என்பது ஒரு மந்திர தந்திர கையேடாகும். ப்ரதி-ஆங்கிரஸம் என்பது மாந்த்ரீகத்தை எதிர் கொள்-வதைக் குறிக்கின்றது. ப்ரத்யங்கிரா என்ற பெயர் ப்ரதி-ஆங்கிரஸம் என்பதிலிருந்து பெறப்பட்டது என்று கருதப் படுகின்றது. அவள் மாந்திரீகத்தால் தாக்குபவர்-களை சினங்கொண்டு எதிர்க்கிறாள்.

ஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவி ஸ்ரீசக்ரத்துடன் தொடர்-புடையவள். அவள் மந்திரவாதத்தால் உருவாக்கப்படும் தாக்கங்களுக்கு ஒரு சக்தி வாய்ந்த எதிரியாகக் கருதப் படுகின்றாள். ஸ்ரீசக்ர வழிபாடு மூலம், அவள் எல்லா

---

[1] நாரஸிம்ஹீ என்று, நரஸிம்ஹரின் பெண் அம்சமாக ஒரு தெய்வம் உண்டு. அதை இங்கு குழப்பிக் கொள்ளக் கூடாது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Vidharthan Collection, Sholinganallur, Chennai

பிரச்சனைகளிலிருந்தும் பக்தர்களைப் பாதுகாத்து சரியான பாதையை வழிகாட்டுகின்றாள்.

ஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவியை வழிபடும் முறைகள் மேரு தந்திர நூலில் மிகவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. ப்ரத்யங்கிரா மந்திரங்கள், மந்திர-மஹோததி மற்றும் வேறு சில நூல்களில் வழங்கப்பட்டுள்ளன. ப்ரத்யங்கிரா சில நேரங்களில் 'பத்ரகாளி' மற்றும் 'சித்தலக்ஷ்மி' என்று அடையாளம் காணப்படுகின்றாள். எனினும் காளி, கமலாத்மிகா, தாரா, த்ரிபுரசுந்தரீ, போன்ற ஒரு வடிவத்தில் ப்ரத்யங்கிரா தேவி வழிபாடு மிக நன்மை பயக்கும். ப்ரத்யங்கிரா சாதனை (வழிபாடு) சூனியத் (துர்மந்த்ரவாதம்) தாக்குதல்களில் இருந்து ஒரு சுய பாதுகாப்பு மற்றும் வாழ்க்கை செழிப்புற முக்கியமாக கையாளப் படுகின்றது. இந்த சாதனை பல நன்மைகள் பயக்க கூடியது.

விஷ்ணு அல்லது நாராயணனின் உக்கிர அவதாரமான நரசிம்மர் ஹிரண்யகசிபுவைக் கொன்று அவனது இரத்தத்தை குடித்ததனால் மிகவும் உக்கிரமாக இருந்தார். அவரது கோபத்தை தணிக்க இயலவில்லை. அனைத்து முனிவர்களும், தேவர்களும் அவரது அமைதியான வடிவத்தை வேண்டி நின்றார்கள். நரசிம்மர் மேலும் மூர்க்கமடைந்ததைக் கண்டு அனைவரும் நடுங்கினார்கள். ஶிவபெருமான் திரி-ஶக்திகளான, பார்வதி, மஹாலக்ஷ்மீ மற்றும் சரஸ்வதியை வழிபட்டு, அவர்களது ஒருங்கிணைந்த ஆற்றலினால் ஒரு ஶரப பக்ஷி வடிவில் ஶரபேஶ்வர அவதாரம் கொண்டார். அந்த பக்ஷியின் ஒரு இறக்கை ஶூலினீ தேவியாகவும் மற்றொரு இறக்கை ப்ரத்யங்கிரா தேவியாகவும் இருந்தனர். ஶரபேஶ்வரர் மற்றும் ஶூலினி தேவியின், உக்கிர நரசிம்மரை கட்டுப் படுத்தும் முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

அது மட்டுமின்றி ஶரபேஶ்வரர், நரசிம்மரை அணுகியபொழுது, அவர் மேலும் உக்கிரமடைந்து 8 தலைகள் கொண்ட "அஷ்ட முக காண்ட பேருண்ட நரசிம்மர்" எனச்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அவரது சிறப்பு வடிவத்தை, வெளிப்படுத்தினார். அவ்வடிவம் கீழ்கண்டவாறு 8 தலைகள் கொண்டிருந்தது;

1. கருடன் - கழுகு முகம் - சுகாதார மற்றும் விஷ முறிவு
2. வராஹதேவர் - பன்றி முகம் - , சூனியம் நீக்கி
3. ஹனுமன் - குரங்கு முகம் - தீய சக்திகளிருந்து பாதுகாக்கும் மற்றும் இழந்த பொருட்களை திரும்பக் கிடைக்கச் செய்யும்
4. பலுகா - கரடி முகம் - இருளில் பாதுகாக்கும் மற்றும் செழுமை கொடுக்கும்
5. ஹயக்ரீவர் - குதிரை முகம் - ஞானம் மற்றும் வாழ்க்கை சக்தி கொடுக்கும்
6. வ்யாக்ரா - புலி முகம் - நோய்கள், அனைத்து வகையான இருந்து போர்களிலிருந்தும் பாதுகாப்பு மற்றும் தீய மற்றும் பேய்களிலிருந்து விடுவித்துக் கொடுக்கும்
7. காண்ட பேருண்ட - இரண்டு முகங்கள் கொண்ட பீனிக்ஸ் போன்ற ஒரு சிறப்பு பறவை - மன அமைதி கொடுக்கும்
8. நரசிம்மர் தானே - சிங்க முகம் - உச்ச பக்தி மற்றும் மோக்ஷம் கொடுப்பது

ப்ரத்யங்கிரா வெளித் தோன்றும் பொழுது, ஶிவபெருமானின் ஶரப வடிவம் ஒரு நூறு துண்டுகளாக சிதறி விட்டது. அவரது ஒரு இறக்கையினின்று ஒரு பெரிய பயங்கரமான உருவத்துடன் ப்ரத்யங்கிரா தேவி தோன்றினாள். அவள் வடிவம், ஶரபேஶ்வரரை விட 1000 மடங்கு அதிக சக்தி வாய்ந்ததாக இருந்தது. அவளது தலை மேகங்களுக்கு மேலும், அவளது கால் பாதாள உலகத்திற்கு கீழும் 1000 தலைகளீல் உறுமும் சிங்க முகங்கள், 2000 இரத்தத்தினால் சிவந்த கண்கள், 2000 கைகளில் பல ஆயுதங்கள், 1000 அகலத் திறந்த வாய்களிலிருந்து இரத்தம் சொட்டும் வெளியே தொங்கும் நாக்குகள் - இவ்வாறு பயங்கரமான உருவமாக இருந்தாள்.

ப்ரத்யங்கிரா வெளித்தோன்றும் பொழுது, இடியும் மின்னலும் பெரிதாக வெளிப் போந்தது. அவளது பயங்கர உருவத்தைப் பார்த்தவுடன் நரசிம்மர் அவரது

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

அவதார நோக்கம் உணர்ந்து, உடனடியாக அமைதியானார் என்று நம்பப்படுகிறது.

ப்ரத்யங்கிரா ஶரபேஶ்வரரது ஒரு இறக்கையிலிருந்து வெளித்தோன்றியவுடன், அவள் நரசிம்மரின் பெண் வடிவை எடுத்து நரசிம்மரை அமைதிப்படுத்தினார். சில இடங்களில் - ஸ்ரீ லக்ஷ்மிதேவி தான் தனது இரகசிய தந்திர வடிவில், ஸ்ரீ நாரசிம்ஹீ உருவெடுத்து, நரசிம்மரை அமைதி படுத்தி மீண்டும் ஆதிசேஷன் மீது சயனிக்க, அவரது அமைதியான வடிவம் மீண்டும் கொண்டு வர முடியும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

ப்ரத்யங்கிரா தெய்வீக தாயின் சிங்கம் தலை கொண்ட வடிவம் ஆகும். அவரது மந்திரத்தினால் மற்றவர்களுக்கு தீங்கு ஏற்படுத்தி பலனடைந்தாலோ, பகை உணர்வுடன் நடந்து கொண்டாலோ, அது அந்த மந்திரத்தைச் செய்தவர் மீதே மீண்டும் ஏகி அவருக்கே தீங்காக முடியும் என்று ரிஷிகள் அறுதியிட்டுக் கூறியுள்ளனர். ப்ரத்யங்கிரா, ஶூலினீ, ஶித்தகுப்ஜிகா, ரக்தகாளி, அகோரர், வடுகர், பைரவர், ஶரபேஶ்வரர், நரசிம்மர் மற்றும் சுதர்சனர் போன்ற பல தெய்வங்களின் பாதுகாப்பு வடிவங்கள் கூட, பல அழிவு சக்திகள் கொண்டுள்ளன. அவர்களது அனைத்து அழிவு அம்சங்களும், அழிவுப் பயன்பாடுகளும் புராண நூல்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

தெய்வீகத் தாயின் ப்ரத்யங்கிரா அம்சம், கடந்த சில நாட்கள் வரை மிகவும் ரகசியமாக இருந்து வந்தது. இந்த ஆற்றல் துறவிகள் மற்றும் முனிவர்களின் நேரடி அனுபவத்திற்காக ஒதுக்கப்பட்டது என்று நம்பப்பட்டது. எந்த வடிவத்தில் ப்ரத்யங்கிராவை தரிசித்தாலும் ஒரு மகத்தான ஆசீர்வாதத்தை அடைந்த பலன் கிடைக்கும்.

ப்ரத்யங்கிரா தெய்வீக அன்னையின் ஒரு ஆழமான இடத்தில் இருந்து வருகிறாள். ப்ரத்யங்கிராவின் ஆற்றல் வெளிப்படும் பொழுது, அது ஒரு மிகவும் துரிதமாகவும் மற்றும் சில நேரங்களில் மூர்க்கமாகவும் இருக்கும். அதன் ஆற்றல் வெளிப்பாட்டைப் பார்த்த ஞானிகள் பலர் பாதி சிங்கம் மற்றும் பாதி மனிதன் என விவரித்தனர் - சிங்கத் தலையில் ஒரு ஆண்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

என்றும் மனித உடலில் ஒரு பெண் என்றும், அதுவே ஶிவ-ஶக்தி ஸாமரஸ்யத்தைக் குறிக்கின்றது என்றும்.

பண்டைய காலத்தில் ப்ரத்யங்கிரர் மற்றும் ஆங்கீரசர் என்ற பெயர் கொண்ட இரண்டு முனிவர்கள் இருந்தனர். அவர்கள், தங்களின் ஆழ்ந்த தியானத்தில், இந்த தேவியை அவரது மூல மந்திரம் மூலமும் நித்திய அலைகள் மற்றும் அதிர்வுகளின் மூலமும் அடையாளம் கண்டு கொண்டனர் - அந்த நேரத்தில் அந்தத் தெய்வம் பெயர் இல்லாமல் இருந்தது என்றாலும், அந்த முனிவர்களது பெயரையே தான் மேற்கொண்டு, அவர்களை ஆசீர்வாதம் செய்து கவுரவித்தாள். அவள் அப்பொழுதிலிருந்து ஸ்ரீ மகா ப்ரத்யங்கிரா தேவி என அழைக்கப்பட்டாள். அவளது பீஜாக்ஷர மந்திரம் 'க்ஷம்' (பேரின்பம்) ஆகும்.

ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா தேவி அனைத்து ஶக்தி வாய்ந்த மற்றும் ரகசியமாக பக்தர்களை காக்கும் தெய்வமாகும். அவள் தன் பக்தர்கள் பக்கத்தில் எப்பொழுதும் உள்ளாள். அவள் ஒவ்வொரு உயிரினத்துள்ளும், அந்த உயிரினம் தூங்கிக் கொண்டிருக்கும் பொழுதும், இவள் விழித்துக்கொண்டேயிருந்து, அந்த உயிரைக் காப்பாற்றிக் கொண்டே இருக்கின்றாள்.

ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா தேவி பற்றிய ஒரு விழிப்புணர்வு, அமைதியாக சமீபத்தில் வரை வெகு சிலரால் மட்டுமே, அறியப்பட்டு வருகிறது. ஸ்ரீ தூர்வாச முனிவர் மற்றும் புலி பாணி சித்தர் போன்ற சித்த முதுநிலையாளர்கள் மற்றும் பெரிய மகரிஷிகளே இந்தத் தேவியின் பக்தர்கள் இருந்து வந்துள்ளனர்.

மற்றொரு கதைப்படி - ப்ரத்யங்கிரா அன்னை இறைவன் ஶரபேஶ்வரரின் கர்வத்தை/ திமிரை அழித்தாள் எனக் குறிப்பிடுகின்றது. அவர் நாரசிம்ஹீ என்றும் அழைக்கப் படுகிறாள் - அவரது தியான ஶ்லோகத்தி நாம் படிப்பது - நாரசிம்ஹீ க்ருபாஸிந்தோ

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

ப்ரத்யங்கிரோ; நாரசிம்ஹீ என்ற பெயர் - அவள் ஒரு பெண் சிங்க முகமும், அழகிய பெண் மனித உடலும் கொண்ட தெய்வம் என்பதனால்.

வாராஹி அம்மனைப் போலவே, பலர் ப்ரத்யங்கிரா தேவியையும் ஒரு உக்கிர அல்லது துஷ்ட தெய்வமாகக் கருதி அதன் படத்தைக் வைத்துக் கொள்ள கூட அஞ்சுகின்றனர். இப்படி தயங்கும் மக்கள் ப்ரத்யங்கிரா தேவியின் கருணை, அழகு மற்றும் பெருமை பற்றி அறியாதவர்கள். ரிஷிகளின் கூற்று - "அவள் ஒரு சாதாரண தெய்வம் அல்ல - ஒரு பெரிய மாயை".

அவள் ஸ்ரீ சக்ர ஸ்வரூபிணீ. 'க்ஷம்' என்பது அவளது பீஜாக்ஷர மந்திரம் ஆகும். ப்ரத்யங்கிரா தேவி பற்றி பேசும் பொழுது, அவளை அடிக்கடி பைரவருடன் தொடர்பு படுத்துகின்றனர். எனவே, அவள் பைரவ பத்னி அல்லது அதர்வண பத்ர காளி (காளி, பைரவரின் மனைவி என்று கருதப்படுவதால்) என அழைக்கப் படுகிறாள். அவள் பிரபஞ்சத்தில், அதர்வண வேத நாயகியாகவும், பாதுகாவலாகவும் கருதப்படுகிறாள். தஞ்சாவூர் அருகில் அய்யாவாடி என்னும் இடத்தில் உள்ள அவளது கோவில், ஒரு மயானத்தின் மத்தியில் அமைந்துள்ளது என்ற செய்தி இங்கு உற்று நோக்கத் தகுந்தது.

இதனுடைய தாத்பர்யம் என்ன என்றால் - அவள் ஒரு துர்தேவதை அல்ல என்று புரிந்து கொள்ள வேண்டும். ஶிவபெருமான் போல, அவள் நமக்கு ஞானம் (அறிவு) மற்றும் சுய உணர்தலை வழங்குகிறாள். ஶிவ-பெருமான் கூட மயானத்தில் குடியிருப்பவன் தானே. அவனைக் கண்டு நாம் அஞ்சுகிறோமா? 'ஶிவ' என்ற சொல்லிற்கே மங்களம் என்று பொருள் ஆயிற்றே! அவள் மரணம் ஏற்படுத்துகின்றவள் அல்லது மரணத்துடன் தொடர்புடைய தெய்வம் எனத் தவறாக கருதக் கூடாது. இடுகாட்டில் வாழ்வதால் மண்டை-யோடுகள், எலும்புகள் மற்றும் எரியும் பிணங்கள், பிணங்களை எரிக்கும் விறகு கட்டைகள் சூழப்-பட்டிருந்தாலும், அவள் மனிதனின் பிறப்பு தொடர்-புடைய உண்மையை வெளிப்படுத்துகிறாள். நாம் ஒரு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சித்தர் பாடலைக் கேள்விப் பட்டிருக்கின்றோம் - "நந்தவனத்தில் ஓர் ஆண்டி, அவன் நாலு ஆறு மாதங்களாய் குழவனை வேண்டி, கொண்டு வந்தான் ஒரு தோண்டி, அதை கூத்தாடி கூத்தாடி போட்டு உடைத்தாண்டி" - இதன் உண்மையான அர்த்தம்; மனிதனாகப் பிறந்த ஒருவன் இறந்தே ஆக வேண்டும் - எரிந்த சாம்பல் தான் வாழ்க்கையின் உண்மை.

ப்ரத்யங்கிரா தேவியை வழிபடும் பக்தர்கள், தீமைகள், விபத்துகள், எதிரிகள், நோய்கள், கோபம், சாபங்கள், தடைகள், மற்றும் சூனியம் போன்ற அனைத்து வகையான கஷ்டங்களிலிருந்தும் விடுவிக்கப் படுகிறார்கள். ஸர்ப தோஷம் அல்லது அடிக்கடி பாம்புகள் சம்பந்தப்பட்ட பயங்கரமான கனவு முதலிய வற்றிலிருந்தும் உடனடி நிவாரணம், ப்ரத்யங்கிரா தேவியை வணங்குவதால் கிடைக்கும். வாராஹீ தேவி கேது தோஷத்திலிருந்து விடுவிக்கின்றாள். இந்த ப்ரத்யங்கிரா தேவி ராகு தோஷத்திலிருந்து நம் அனைவரையும் விடுவிக்கின்றாள் என்று நம்பப்படுகிறது. அவளுடைய மகிமையை அனுபவித்த பக்தர்கள் தங்கள் அனுபவத்தை பகிர்ந்து கொண்டுள்ளனர் - வீட்டை சுற்றிலும் குங்குமம் பரப்புவதன் மூலம், வீட்டின் நுழைவாயிலில் ஒரு தடையாகச் செயல்படுகிறது மற்றும் தீய ஆன்மாக்கள், பாம்பு மற்றும் இதர விஷ ஆன்மாக்களிருந்து வீடு மற்றும் குடும்பம் பாதுகாக்கப் படுகின்றது.

பின்வருபவை ப்ரத்யங்கிரா தேவிக்கு மிகவும் பிடித்த உணவுகள் - நைவேத்தியம் செய்ய உகந்தவை;

1. பானகம் (வெல்லம், ஏலக்காய் பொடி, சுக்கு முதலியன கலந்த நீர்)
2. கடலை அல்லது பயத்தம் பருப்பு பாயசம்
3. உளுந்து வடை
4. எள்ளு உருண்டை
5. செவ்வாழைப்பழம்
6. மாதுளைப் பழம்
7. பேரீச்சைப் பழம்

பின்வருபவை ப்ரத்யங்கிரா தேவிக்கு உகந்த நிறங்கள்;

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

1. கருஞ்சிவப்பு - ஶாந்த ப்ரத்யங்கிரா மற்றும் உக்ர ப்ரத்யங்கிராவிற்கு உகந்தது
2. ஊதா நிறம் - ஶாந்த ப்ரத்யங்கிராவிற்கு உகந்தது
3. மஞ்சள் - ஶாந்த ப்ரத்யங்கிராவிற்கு உகந்தது
4. கருப்பு - உக்ர ப்ரத்யங்கிராவிற்கு உகந்தது

பின்வருபவை ப்ரத்யங்கிரா தேவி பூஜைக்கு உகந்த விசேஷ நாட்களாகும்;

1. அமாவாஸ்யை
2. பௌர்ணமி
3. சுக்ல அல்லது கிருஷ்ண பக்ஷ அஷ்டமி
4. ஞாயிற்றுக் கிழமை
5. செவ்வாய்க் கிழமை
6. வெள்ளிக் கிழமை

ப்ரத்யங்கிரா தேவி மூல மந்திரம் மற்றும் சில எளிய மந்திரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன. இவற்றை தகுந்த ஆசிரியர் மூலம் உபதேசம் பெற்ற பின்னரே ஜபிக்கலாம் என்று வாசகர்கள் எச்சரிக்கப் படுகின்றார்கள்.

ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா ஹோம மந்திரம்;

ஓம் க்ஷம் க்ருஷ்ண வஸஸே, சிம்ம வதனே, மகா வதனே, மகா பைரவீ, ஸர்வ ஶத்ரு கர்ம வித்வம்ஸினீ, பரமந்த்ர சேதினீ, ஸர்வ பூத தமனீ, ஸர்வ பூத பந்த பந்த, ஸர்வ விக்னான் ஸிந்தி ஸிந்தி, ஸர்வ வ்யாதிர் நிக்ரிந்த நிக்ரிந்த, ஸர்வ துஷ்டான் பக்ஷ பக்ஷ, ஜ்வாலா ஜிஹ்வே, கராள வக்த்ரே, கராள தம்ஷ்ட்ரே, ப்ரத்யங்கிரே ஹ்ரீம் ஸ்வாஹா ||

சுருக்கமாக அதே ஹோம மந்திரம்;

ஓம் ஹ்ரீம் க்ஷம் பக்ஷ ஜ்வாலாஜிஹ்வே கராலதம்ஷ்ட்ரே ப்ரத்யங்கிரே க்ஷம் ஹ்ரீம் ஹூம் பட் (ஸ்வாஹா) ||

ஶ்லோகம் - 1

உக்ரம் வீரம் மஹா ஶக்திம் ஜ்வலந்தம் ஸர்வதோ முகம் ப்ரத்யங்கிரா பீஷணம் பத்ரம் ம்ருத்யும் ம்ருத்யும் நமாம்யஹம் ||

ஶ்லோகம் - 2 - ஸ்ரீ ப்ரத்யங்கிரா காயத்ரி மந்திரம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஓம் அபராஜிதாயைஶ்ச வித்மஹே ஶத்ரு நிஶூதின்யைச தீமஹி தன்னோ ப்ரத்யங்கிராயை ப்ரசோதயாத் ||

ஶ்லோகம் – 3

அம்மா ப்ரத்யங்கிரா, தேவீ ப்ரத்யங்கிரா, ஸத்யம் ப்ரத்யங்கிரா, ஸர்வம் ப்ரத்யங்கிரா, ஷோலிங்கநல்லூர் வாழும் ப்ரத்யங்கிரா, வல்வினைகள் தீர்க்கும் அன்னையே ப்ரத்யங்கிரா.

ப்ரத்யங்கிரா ஸ்தோத்ர மாலையில், அவள் அழகாக வர்ணிக்கப் படுகின்றாள்;

ஶரபேஶன் இறக்கையால் வந்தவளே போற்றி,
சீரிய ஸிம்ஹ முகம் ஏற்றவளே போற்றி,
நரஸிம்ஹன் உக்ரம் தணித்தவளே போற்றி,
ஆங்கீரசர் ப்ரத்யங்கிரசர் த்யானமே போற்றி,
பைரவர் மனம் நிறைந்தாய் போற்றி,
எங்கள் அன்னை ஸ்ரீ ப்ரத்யங்கிரா போற்றி போற்றி.

மேற்கண்ட ஶ்லோகங்களைக் கடினமாக உணர்பவர்கள் "ஜெய ப்ரத்யங்கிரா, ஜெய ஜெய ப்ரத்யங்கிரா" என்ற மந்திரத்தை முடிந்த எண்ணிக்கையில் ஜபம் செய்யலாம். ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா தேவி வழிபாடு ஒருவர் வாழ்விலிருந்து அனைத்து தீய சக்திகளையும் விலக்கும் மற்றும் தீர்க்க முடியாத பிரச்சினைகளை யெல்லாம் தீர்த்து விடும்.



கடவுளிற்கு எத்தனை-யோ அம்சங்கள் உள்ளன. கடவுள் எல்லையற்றவர் என்று எடுத்துக் கொண்டால், பல அம்சங்கள் இருக்-கலாம் என்பதை புரிந்து கொள்ளலாம். மத போதகர்களும் ஆன்மீக சாதகர்களும் தன் நேரம் முழுவதும் அனுபவித்த கடவுளின் பல புனித அம்சங்களைத் தெரிவிப்பதற்கு பழக்கமான

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
பல ஒப்பீடுகள் கொடுத்து தொடர்புபடுத்த முயற்சி செய்துள்ளனர். பல தெய்வீக ஆற்றல் விளக்கங்கள், பெண்மை மற்றும் தாய்மையைக் குறித்து உள்ளவை. ஆனால் இன்னும் ஆழமாக போகிற பொழுது, அதே அன்னையின் ஆற்றல் பல்வேறுபட்ட அம்சங்களை கொண்டுள்ளன என்று கண்டறிய இயலும். ஸ்ரீ மகா ப்ரத்யங்கிரா தேவி, ஒரு ஆழமான மற்றும் ஶக்தி வாய்ந்த அன்னையின் அம்சம் ஆகும். அவர் ஒரு ஆண் சிங்கத் தலையுடனும் மற்றும் ஒரு பெண் மனித உடலுடனும் உள்ள ஒரு தேவியாக காட்சி அளிக்கின்றாள். அவளது ஆண்மை மற்றும் பெண்மை ஆற்றல் இடையே ஒரு சமநிலை கலப்பு ஆகும் - ஶிவ-ஶக்தி ஸாமரஸ்யம் ஆகும். ப்ரத்யங்கிரா தேவி தர்மம், சத்யம், உண்மை மற்றும் நீதி இவைகளின் உருவகமாக உள்ளாள். இந்த அன்னை எதிர்மறை கர்மாக்களை அழித்து, தூய நோக்கங்கள் வைத்திருக்கும் தர்ம பாதையில் நடக்கும் ஒரு சாதகன் அல்லது பக்தனுக்கு வெகுவிரைவிலேயே பிரார்த்தனைகளுக்கு பதிலளிக்கிறாள்/ பலனளிக்-கின்றாள். அவள் பக்தனின் தேவையற்ற அல்லது எதிர்மறை ஆற்றலை சுத்தமாக்கி, அந்த ஆற்றல் உருமாறுமாறு செய்கின்றாள். அவளது அருளால், ஒரு உண்மையான பக்தன் ஒரு தூய சுத்திகரிக்கப்பட்ட ஆன்மா ஆகின்றான்.

தாய் ப்ரத்யங்கிரா தேவி, நம் வாழ்வில் இருந்து பயம் மற்றும் வலியை நீக்கி நமக்கு நல் வழியை போதிக்கின்றாள். இந்த அச்சம் அல்லது வேதனைகள், நம் வாழ்வில் சில அம்சங்களுடன் கூடிய நமது பிணைப்புகளால் தான் ஏற்படுகின்றன என்று நமக்கு புகட்டுகின்றாள். இந்த பந்தங்களிலிருந்து விடுபட மறுப்பது, மனித வாழ்வின் காயங்களிலிருந்தும், வலிகளிலிருந்தும் விடுபட மறுப்பதற்கு ஒப்பாகும். ஒருவரது வாழ்வில் வலி/ பயம் இருந்தால், ஏதோ ஒன்று வெளியேற்றியே ஆக வேண்டும், மற்ற ஏதாவது ஒன்றை கற்றுக் கொள்ள இயலும். இந்த வெளியீடு தியானம் மிகுந்த சிந்தனை மற்றும் அவளது அருள் மூலமே சாத்தியமாகும். இவை வெளியேறிய உடன் அங்கு வெற்றிடம் உண்டாகிவிட்டது. முதல் முறையாக இந்த வெற்றிட அனுபவம் தாயுடன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பயணம் செய்வது போல் தோன்றும். எப்பொழுதும் இந்த ஆறுதல் கூடவே வருகின்றது, எப்பொழுதும் இந்த அன்னை நம்முடன் வருகின்றாள். காலம் முழுவதும் அவள் பொறுமையாகவும், சகிப்புணர்வோடும் தயாராக தன்னை வெளிப்படுத்துகின்றாள். அவளது இதயம், காத்திருக்கின்றது. இனி நம் தேர்வே - அவளுடைய கையைப் பிடிப்பது; அவள் நம்மை ஆரத் தழுவ காத்து இருக்கின்றாள்.

தாய் ப்ரத்யங்கிரா தேவி, முற்றிலும் மற்றும் முழுமையாகவும் தன்னை கொடுக்கத் தயாராக உள்ளாள் - அவள் அருள் ஒரு கடல். அவளை ஏற்கனவே அதர்வணபத்ர பத்ரகாளி என்று கூறியுள்ளோம் - பத்ரா என்றால் மங்களம் என்று பொருள். அவள் நமது பக்தியை மட்டுமே கேட்கின்றாள். பதிலுக்கு அவள் நமது சொந்த நிஜ இயல்பை வெளிப்படுத்தி, எண்ணற்ற பலன்களை கொடுக்கின்றாள்.

உண்மையான பக்தி எங்கிருக்கின்றதோ, அங்கே தாய் ப்ரத்யங்கிரா தானாகவே வெளிப்படுத்திக் கொள்கின்றாள். அவள் மோக்ஷத்தைக் கொடுக்கும் தாய் - நம்மை ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுவித்து, வாழ்க்கை, மரணம் மற்றும் மறுபிறப்பு சுழற்சியிலிருந்தும் விடுவிக்கின்றாள்.

ப்ரத்யங்கிரா தேவி ஶிவபெருமானுடைய மூன்றாவது கண்ணிலிருந்து தோன்றியதாக சிலர் கூறுவர். நல்ல மற்றும் தீயவற்றின் இடையே சமநிலையின் அடையாளமாக சிங்கம் மற்றும் மனித வடிவங்கள் இணைந்து தோன்றியுள்ளாள். ப்ரத்யங்கிரா தேவி, தெய்வீக தாயின், சக்திவாய்ந்த, மூர்க்கமான மற்றும் ஆழமான அம்சம் ஆவாள். ப்ரத்யங்கிரா தேவி கடுமையான பாதுகாப்புத் தெய்வம். ஆகையால்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பல்வேறு நோய்கள், துன்பங்களையும், எதிர்மறையான தாக்கங்களை குணப்படுத்த வல்லவள். ப்ரத்யங்கிரா தேவி பூஜை, மந்திரம், ஜபம் மற்றும் ஹோமம் முதலியன மாந்திரீகத்தில் பல்வேறு பாதகமான, சூனியம், நோய்கள் மற்றும் துரதிருஷ்டடங்களிலிருந்து நிவாரணம் மற்றும் பாதுகாப்பு மிக்க ஶக்தி வாய்ந்தவை.

தாய் ப்ரத்யங்கிரா தேவி சமநிலை வேண்டும் பொழுதெல்லாம் மட்டும் வடிவம் எடுகின்றாள். ஏனெனில் நாம் இந்த தற்போதைய காலத்தில் சந்திக்கும், அவளது ஆற்றல் இந்த நேரத்தில் அனைத்து உயிரினங்களுக்கும் உதவ இங்கே இருக்கின்றாள் என்று பண்டைய நூல்களில் எழுதப்பட்டுள்ளன. பல சிங்கங்களின் தாடைகள் ஒரு ஆன்மீகப் பாதையில் உள்ள அனைவரின் எதிர்மறை கர்மாக்களை அகற்றும் மிகவும் ஶக்தி வாய்ந்தவை ஆகும். அத்தகைய ப்ரத்யங்கிராவை புரிந்து கொள்ள கடினமான இருந்தாலும், மரியாதையுடனும் பக்தியுடனும் அணுகினால் சிறந்த ஆழமானக் கருத்துக்களை பெற இயலும். அதனால்தான், ப்ரத்யங்கிரா தேவி தனது அருள் கதிர் வீச்சை அதே தீவிரத்துடன் தயாராக வைத்துள்ளாள். நாம் தான் அவற்றை பெற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

இவ்வாறு மகா ஶக்தியான, ப்ரத்யங்கிரா தேவி, ஒரு மிகவும் அற்புதமான தெய்வீகத் தாயாவாள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Harihara Collection, Sholinganallur, Chennai

ப்ரத்யங்கிரா உருவம்

ப்ரத்யங்கிரா தேவி தோற்றம்

ப்ரத்யங்கிரா தேவியை பல்வேறு நூல்கள், அந்தந்த ப்ராந்தியத்திற்கு தகுந்தாற்போல், பல்வேறு வடிவங்களில் சித்தரித்துள்ளன. பொதுவாக பல ஆயுதங்கள் மற்றும் புனைவுகள் மற்றும் விளக்கங்கள் கொண்டவளாகவும் - நரசிம்மரைச் சமாதானப் படுத்த வந்ததனால் சிங்க முகத்துடனும், சித்தரிக்கப் படுகின்றாள். அவள் சில நேரங்களில் நீல நிறமாகத் வர்ணிக்கப் படுகின்றாள். சில சமயம் கருப்பு நிறமாக சித்தரிக்கப் பட்டுள்ளாள்.

நாம் அவளை பார்க்கும் பொழுது, அவள் வாயை ஆவென்று திறந்திருப்பதால் ஒரு பயத்துடன் பார்ப்பதாகவே உள்ளது. நாம் அவளை பற்றி இரண்டு பதிப்புகள் கேள்விப் படுகின்றோம். ஒன்று - தனது திறந்த வாயால், அவள் அனைத்து துஷ்ட ஶக்தி, வல்வினைகள், தீய ஶக்திகள், த்ருஷ்டி மற்றும் செய்வினை முதலியவற்றை உறிஞ்சி, தனது பக்தர்-களை காப்பாற்றுகின்றாள். அவளது போற்றி மாலை-யில் - "வல் வினைகள் யாவையுமே தீர்ப்பவளே போற்றி, எங்கள் அன்னை ஸ்ரீ ப்ரத்யங்கிரா போற்றி".

இரண்டாவது - அவள் த்யான நிலையில் உள்ளவளாகக் விவரிக்கப் படுகின்றாள். ஒருவர் விடுதலை புள்ளியோ அல்லது உச்ச தியான நிலையையோ அடையும் பொழுது, வாய் தானாக, பரவலாக திறக்கப்படுகின்றது என்று நம்பப்படுகின்றது. ப்ரத்யங்கிரா என்றென்றும் த்யானம் அல்லது யோக நிலையில் அவளது பக்தர்களுக்காக இருக்கின்றாள்.

அவள் உடலில் 8 பாம்புகளை தாங்கியுள்ளாள். அவளது போற்றி மாலையில் "அஷ்ட நாக கொண்ட காளி த்ரிஶூலி" என விவரிக்கிப் படுகின்றாள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சில உருவங்களில் அவள், மூர்க்கமாக, சிவப்பு நிற கண்களுடன், ஒரு சிங்கத்தின் முகம் கொண்டு, மற்றும் ஒரு சிங்கத்தின் மீது சவாரி செய்து கொண்டு, முற்றிலும் நிர்வாணமாக அல்லது கருப்பு வஸ்திரங்களை அணிந்து கொண்டு, மனித மண்டை ஓட்டு மாலை அணிந்து காணப் படுகின்றாள்; அவள் ஜடாமுடி தரித்து, திரிசூலம், பாசக் கயிறு, டமரூ, மண்டை ஓடு மற்றும் பாம்பைக் கையில் பெற்றுள்ளாள். அவள் பைரவருடன் தொடர்புடையவள் - அதனால் ஒரு மாறுபட்ட வடிவத்தில், அதாவது அதர்வண-பத்ர-காளியாக சில சமயம் சித்தரிக்கப் படுகின்றாள்.



தனது முழு வடிவத்-தில், சில அறிஞர்களின் கூற்றுப் படி, மிகப் பெரிய உருவமாக, 1008 தலைகள் (அண்ட ஆற்றல் உலகளாவிய ஸஹஸ்ரார சக்ரத்தின் 1008 இதழ் தாமரையை அடையாளரீதியாக குறிக்கும்) 2016 கைகள், 4 சிங்கங்கள் (4 வேதங்களைக் குறிக்கும்) இழுக்கும் ஒரு தேரில் கம்பீரமாக சவாரி செய்வதாகக் குறிப்பிடப்-பட்டுள்ளாள். பக்தர்களின் பல தடைகளை நீக்க அவள் பல வாளேந்தியவளாக பவனி வருகின்றாள்.

நான்கு சிங்கங்கள் பலவற்றை பிரதிபலிக்கின்றதாகக் கருதப்படுகின்றது - நான்கு யுகங்கள்; ஒருவரது வாழ்க்கையின் நான்கு நிலைகள் - குழந்தை, பருவ, இளைஞ, மூத்த; மனிதன் வாழ நான்கு தேவைகள் - தர்ம, அர்த்த, காம, மோக்ஷ; ஆன்மீகத்தின் நான்கு பரிணாம வளர்ச்சிக் கட்டங்கள் - ஸ்ரியை, க்ரியை, யோகம், ஞானம்; மாதா, பிதா, குரு, தெய்வம் (அம்மா, அப்பா, ஆசிரியர், கடவுள்) - இவ்வாறு. இந்த தேரின் கீழே ஒரு எட்டு இதழ் கொண்ட தாமரை, வாழ்க்கை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பிறப்பு மற்றும் இறப்பிலிருந்து விடுபட எட்டு அயல் பாதையை வெளிப்படுத்தும் விதமாக இருக்கின்றது.

பல சிங்கத் தாடைகள், எதிர்மறை கர்மாக்களை அழிக்கும் மிகவும் ஶக்தி வாய்ந்ததாக இருக்கின்றன. மேலும் ஒரு ஆன்மீக பாதையில் ஒரு பெரிய ஆசீர்வாதமாகவும் இருக்கின்றன. இதுபோன்ற ஒன்று புரிந்து கொள்ள கடினமானதத்தான் இருக்க முடியும். எனவே அது மரியாதையுடனும் இதயபூர்வ பக்தியுடனும் அணுகப் பட வேண்டிய ஒன்று.

இந்தத் தோற்றத்தின் சில அம்சங்கள் இங்கே விவரிக்கப் பட்டுள்ளன;

- சிங்க முகம் - ப்ரத்யங்கிராவின் சிங்க முகம், வழக்கமாக நல்லவர்களைத் தீயவற்றினின்று பாதுகாக்கின்றது
- ஆயிரம் தலைகள் - தீயவற்றைப் பயப்படச் செய்தல்; நல்லவற்றை பாதுகாக்க
- இரண்டு ஆயிரம் கைகள் - ப்ரத்யங்கிரா பொதுவாக இரண்டு ஆயிரம் கைகள் அல்லது புஜங்களுடனும் காணப் படுகின்றாள்.
- ஆயுதங்கள் - அவள் கையில் ஆயிரக்கணக்கான ஆயுதங்கள், தீயவற்றை அழிப்பதற்காக உள்ளன

கீழ்கண்ட ஶ்லோகம் ப்ரத்யங்கிராவின் உருவத்தையும் அவள் கையில் உள்ள ஆயுதங்களையும் ஓரளவு விளக்குகின்றது;

கையில் உள்ள ஆயுதங்கள்;

- அக்ஷமாலா - ருத்ராக்ஷ அல்லது மணி மாலை
- குண்டிகா - ஒரு பானை
- பத்ம - தாமரை மலர்
- பானபாத்ர - நீர் பாத்திரம் - கிண்டி அல்லது பஞ்ச பாத்திரம்
- பாண - ஓர் அம்பு
- சாப - ஒரு வில்
- கட்கசர்ம - காண்டாமிருகத்தின் தோல்
- குலிஶ - வஜ்ராயுதம்
- தண்ட - ஒரு தடி அல்லது குச்சி
- கதா - கதை
- ஶக்தி - ஶக்தி ஆயுதம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

- சக்ர - சக்ராயுதம்
- பாஶ - பாஶக்கயிறு
- த்ரிஶூலம்
- கண்டா - மணி
- பரஶு - கோடரி
- ஶங்காதி - ஶூலம் முதலிய

அவளது உருவ தோற்றம் விவரிக்கப் படுகின்றது;

மேலே விவரித்தவாறு ஆயிரக் கணக்கான ஆயு-தங்களை தரித்தவள் (ஸஹஸ்ரகோட்யாயுத தாரிணி), ஆயிரம் முகங்கள் (ஸஹஸ்ரவதனே), சிங்கப்பல் (ஸிம்ஹவக்த்ரே), தீ ஜ்வாலையுடன் கூடிய நாக்கு (ஜ்வாலாஜிஹ்வே), பரந்த தந்தம் (கராளதம்ஷ்ட்ரே); நூறாயிரம் கோடி சிம்மங்கள் உள்ள ஆசனத்தில் வீற்றிருக்கின்றாள் (ஶதஸஹஸ்ரகோடி ஸிம்ஹா-ஸனே).

மேலே குறிப்பிட்ட எண்கள் நூறு, ஆயிரம் மற்றும் கோடி போன்றவற்றையெல்லாம் பொருள் ரீதியாக எடுத்துக் கொள்ள கூடாது. ஆயிரக்கணக்கான - எண்ணற்ற - பலப்பல - என்று புரிந்து கொள்ள வேண்டும்.

Sri Atharvana Badra Kali

*****

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Shelinganallur, Chennai

ப்ரத்யங்கிரா யந்திரம்

கடவுள்களை மந்திர, தந்திர, யந்திர வடிவில் பூஜை செய்வது வழக்கம். மந்திரங்கள் கொண்டு வழிபடுவது மாந்த்ரீக மார்க்கம். தந்திரங்கள் கொண்டு வழிபடுவது தாந்த்ரீக மார்க்கம். யந்திரங்கள் கொண்டு வழிபடுவது வைதீக மார்க்கம். ஆயினும் அனைத்து வழியிலும் மந்திரங்கள் பயன் படுத்தியே ஆக வேண்டும். எது பிரதானம் என்பதே முக்கியம்.

மந்திரங்கள், தெய்வங்களின் ஒலி வடிவம் - சாதனையின் (வழிபாட்டின்) உள்ளடக்கமாக இருக்கின்றன. ஒவ்வொரு கடவுளருக்கும் தனித்தனி மந்திரங்கள் உள்ளன. அவை வெவ்வேறு எண்ணிக்கையில் எழுத்துக்கள் கொண்டுள்ளன. இவ்வாறான எழுத்துக்களின் எண்ணிக்கைக்கு ‘சந்தஸ்’ என்று பெயர். குறிப்பிட்ட நோக்கத்திற்காகவும், ஒவ்வொரு கடவுளைக் குறித்தும் பல்வேறு மந்திரங்கள் உள்ளன.

தந்திரங்கள் (பொதுவாக கை முத்திரை பயன் படுத்துவது) பற்றிய தத்துவத்தில் வேரூன்றி பல ஆச்சரியத்திற்குரிய மரபுகள் பல்வேறு நூல்களில் கொடுக்கப் பட்டுள்ளன. அடிப்படையில் தந்திரங்கள் மத கலாச்சார தந்திர பொருட்கள் பண்டைய வேத மூலங்களில் இருந்து பெறப்பட்டதாகக் கருதப் படுகின்றன. மேலும் வெவ்வேறு மதங்களைச் சார்ந்த தந்திரங்களில் வெளியில் இருந்து பார்க்கும் பொழுது பல ஒற்றுமைகள் தோன்றினாலும், உள்ளுக்குள்ளே சில தெளிவான வேறுபாடுகளை காண இயலும்.

